## சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – "நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினர் பண்பாடு சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்" அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.53 நாள் 22.03.2018

திருவள்ளுவராண்டு, 2049
ஹேவிளம்பி வருடம், பங்குனி–8

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.5894/உ1/2017, நாள் 09.03.2018.

~*~~*~

ஆணை:–

2017–18–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் தனித்தன்மை வாய்ந்த பொருள் சார்ந்த நூலகங்கள் மற்றும் காட்சிக்கூடங்கள் அமைக்கப்படும். சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்து தஞ்சாவூரிலும், நாட்டுப்புறக் கலைகள் சார்ந்து மதுரையிலும், தமிழ் மருத்துவம் சார்ந்து திருநெல்வேலியிலும், பழங்குடியினர் பண்பாடு சார்ந்து நீலகிரியிலும், கணிதம், அறிவியல் சார்ந்து திருச்சியிலும், வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்து கோயம்புத்தூரிலும், அச்சுக்கலை சார்ந்து சென்னையிலும் இவை அமைக்கப்படும். மேற்கண்ட சிறப்பு நூலகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் ஒவ்வொன்றும் ஒரு கோடி செலவில் மொத்தம் ரூ.8 கோடி செலவில் அமைக்கப்படும்".

2. பொது நூலக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியின மக்கள் பேசும் மொழிக்கு எழுத்து வடிவம் கிடையாது என்பதால், தொன்றுதொட்டு இருந்து வந்த கலாச்சாரம் அழிந்து வருவதனை பாதுகாக்கும் வகையிலும், இங்கு வரும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் பழங்குடியினர் குறித்து ஆராய்ச்சி செய்வதிலும், அவர்களது வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரம் குறித்து அறிவதிலும் ஆர்வம் காட்டி வருவதாலும், பள்ளி மாணவ/மாணவியர்கள் சுற்றுலாப்பயணிகள், பழங்குடியின மக்கள் குறித்த ஆராச்சியாளர்கள் மற்றும் வாசகர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இச்சிறப்பு நூலகம் அமைப்பது மிகவும் அவசியமாகும் என்பதால் இது சார்ந்த சிறப்பு நூலகத்தினை நீலகிரி மாவட்ட மைய நூலகத்தின் தரைதளத்தில் 936 சதுர அடியில் பழங்குடியினர் பண்பாடு சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் அமைக்கவும், அதற்கு தேவையான உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் இதர செலவினங்களை கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கான செலவினம் ரூ.45,88,138/–ஐ (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நூற்று முப்பத்தெட்டு மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்

(த.பி.பா)

பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

| வ. எண். | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தரைத்தளம் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்து கட்டடம் கட்டுதல் / மின் பணிகள் மற்றும் தனித்தனி அறைகள் அமைக்க ஆகும் செலவு | 30,00,000.00 |
| 2. | நூல்கள் வாங்குதல் | 5,00,000.00 |
| 3. | அரிய வகை புகைப்படங்கள் Enlarge / Laminated | 2,95,000.00 |
| 4. | Projector, Screen 8 x 6, ft Wall Mounting Kit, HDMI Cable Wire | 48,800.00 |
| 5. | கணினி மற்றும் கணினி சார்ந்த உபகரணங்கள் வாங்குதல் | 2,67,146.00 |
| 6. | தளவாடப்பொருட்கள் வாங்குதல் | 4,77,192.00 |
| | மொத்தம் | 45,88,138.00 |

3. பொது நூலக இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து அதனை ஏற்று, நீலகிரி மாவட்ட மைய நூலகத்தின் தரைதளத்தில் 936 சதுரஅடியில் “நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினர் பண்பாடு சார்ந்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்” அமைப்பதற்கும், அதற்கான செலவினத் தொகையான ரூ.45,88,138/–த்தை (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நூற்று முப்பத்தெட்டு மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.927/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 15.03.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை–2.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை–6.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ம.ஜெயலட்சுமி
பிரிவு அலுவலர்

7/10